11.08.2022

**MCOP No.**1177/2018

**மனுதாரர் தரப்பு சாட்சி - 1- ஜெயராணி**

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்**

**1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது கணவர் இருசக்கரவாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு இறந்துபோனார். 2 ம் எதிர்மனுதாரர் மீதுததான் குற்றவழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 2 ம் எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் விபத்து சம்பந்தமாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 2 ம் எதிர்மனுதாரர் காவல் துறையினரிடம் விபத்து நடந்த 15 நாட்களுக்கு முன்னதாகவே சுப்பிரமணியன் மனைவி கமலா என்பவர் பெயரில் உள்ள டிராக்டரை 2 ம் எதிர்மனுதாரர் வாங்கியதாக வாக்குமூலத்தில் கூறியுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அத்துடன் வாகனத்தை தனது பெயருக்கு பதிவு சான்றிதழ் பெயர் மாற்றம் செய்யவில்லை என கூறியிருக்கிறார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிர் உரை விபரங்களை நான் படித்து பார்க்கவில்லை. 13.01.2018 ம் தேதி 1 ம் எதிர்மனுதாரர் 6 ம் எதிர்மனுதாரரிடம் டிராக்டர் வாங்குவதற்கான முன் பணம் ரூ.50,000/-ஐ செலுத்தியுள்ளார் என்ற விபரத்தையும், பழைய டிராக்டரை பரிமாற்றம் செய்து ரூ.1,46,000/-ஐ வரவு வைத்து 17.01.2018 அன்று ஈடுசெய்து அதற்காக ஆவணங்கள் வழங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ள விபரமும் எனக்கு தெரியாது. 19.01.2018 அன்று மேலும் கடன் தொகை ரூ.4,75,000/-ஐ டி.வி.எஸ் சுந்தரம் பைனான்ஸ் மூலம் பெற்று டிராக்டரை பெற்றுக்கொண்டுள்ளார் என்று கூறப்பட்டுள்ள விபரமும் எனக்கு தெரியாது. எனது கணவர் ஓட்டிய இருசக்கரவாகனம் 7 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ளது. 6-7 எதிர்மனுதாரர்களை பின்னிட்டு வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். அவர்கள் 1 ம் எ திர்மனுதாரரின் மனுவின் அடிப்படையில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றால் சரிதான். விபத்து பற்றி

எனக்கு நேரில் தெரியாது. எனது கணவர் வருமானம் ஈட்டிவந்தார் என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் கணவர் ரியல் எஸ்டேட் தொழில் செய்துவந்தார் என்பதற்கு ஆவணம் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் தலைக்கவசம் அணிந்து சென்றதாக முதல் தகவல் அறிக்கையிலும், முதல் விசாரணை வாக்குமூலத்திலும் கூறவில்லை என்றால் சரிதான். எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. 7ம் நிறுவனத்தில் வாகனத்தை காப்பீடு செய்தற்கான ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேன். என் கணவர் வாகனம் காப்பீடு செய்யப்பட்ட 7ம் எதிர்மனுதாரர் தான் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் விபத்து சமயத்தில் வாகனத்தின் உரிமையாளர் அல்ல என்றும் எனவே, 1ம் எதிர்மனுதாரரை வழக்கில் இருந்து நீக்கரவு செய்ய 1ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்த இ/ம.333/2020 மனுவில் நான் தாக்கல் செய்த எதிர்உரையில் ஒப்புக்கொண்டுள்ளேன் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் விபத்துக்கு 15நாட்களுக்கு முன்னரே விற்பனை செய்துவிட்டதாலும் 26.01.2018ம் தேதியில் 1ம் எதிர்மனுதாரர் வாகன உரிமையாளர் அல்ல என்பதாலும் 1ம் எதிர்மனுதாரர் அவசியமற்ற தரப்பினர் என்றும் அதனால் இழப்பீடு செலுத்த கடமைப்பட்டவர் அல்ல என்றும் சொன்னால் சரியல்ல. எனது கணவர் சென்ற இருசக்கரவானத்தின் மீது டிராக்டர் மோதவில்லை என்றும் என் கணவர்தான் டிராக்டரின் பின்னால் சென்று மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார் என்று சொன்னால் சரியல்ல. 3ம் மனுதாரர் தனியார் வங்கியில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரர் எந்த இழப்பீடும் செலுத்த தேவையில்லை என்றால் சரியல்ல.

**<u>3 முதல் 5 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

விபத்தில் ஈடுபட்ட டிராக்டர் மற்றும் டிரெய்லர் 3 முதல 5 எதிர்மனுதாரர்களுக்கு சம்பந்தமற்றது என்றால் சரிதான். டிராக்டர் டிரெய்லர் காப்பீடு செய்யப்பட்டுள்ளது பற்றி எனக்கு தெரியாது. டிராக்டர் டிரெய்லர்

அரசு துறைக்கு பாத்தியப்பட்ட வாகனம் அல்ல என்றால் சரிதான். டிராக்டர் டிரெய்லர் உரிமையாளார் மற்றும் காப்பீடு நிறுவனத்திடம் இருந்து தான் இழப்பீடு கோரமுடியும் என்றால் சரிதான். என் கணவர் இறந்த 1 மாத காலத்திற்கு உள்ளாக இருசக்கரவாகனத்தின் காப்பீடு மற்றும் பதிவு சான்றிதழை என் கணவர் இறந்த விபரத்தை கூறி பெயர் மாற்றம் செய்யவில்லை என்றால் சரிதான். அவ்வாறு பெயர் மாற்றம் செய்யவேண்டும் என்று எனக்கு தெரியாது. அந்த வாகனம் பயன்படுத்தப்படவில்லை. அதை ரெனிவல் செய்யவும் இல்லை. வாகனம் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளதா பதிவு சான்றிதழ் பெயர் மாற்றம் செய்யறப்பட்டுள்ளதா என்பதை அரசுக்கு சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிக்காத நிலையில் அவ்வப்போது செய்யப்படும் சோதனைகளால் மட்டுமே கண்டறிய முடியும் என்றும் டிராக்டர் டிரெய்லர் பெயர் மாற்றம் செய்யப்படாதது தனி நபரின் தவறு என்றும் இதில் அரசின் கவனக்குறைவு எதுவும் இல்லை என்றும் எனவே 3 முதல் 5 எதிர்மனுதாரர்கள் வழக்கிற்கு அவசியமற்றவர்கள் என்று சொன்னால் சரியல்ல. டிராக்டர் டிரெய்லர் 3 முதல் 5 எதிர்மனுதாரர்களுக்கு எவ்விதத்திலும் தொடர்பற்றது என்பதால் 3 முதல் 5 திர்மனுதாரர்களை பொறுத்து வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.